**கிரிபாவ பிரதேச சபை**
**குருநாகல் மாவட்டம்**

1. **நிதிக்கூற்றுக்கள்**

1.1 **நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூலை 22 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 26 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தம்பர் 27 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கிரிபாவ பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்பட்டிருந்த ரூபா 151,000 பெறுமதியான நீர் பௌசர் மற்றும் நீர் மோட்டரின் பெறுமதி, மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் என்பவற்றின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் அப்பெறுமதியால் மோட்டார் வாகனங்கள் மற்றும் வண்டிகள் என்பவற்றின் பெறுமதி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட 03 தோப்பு கட்டிடங்கள் மற்றும் காணியின் பெறுமதி ரூபா 4,266,906 ஆக இருந்த போதிலும், உடைத்து அகற்றப்பட்டிருந்த ரூபா 582,100 ஆன கட்டிடங்களின் பெறுமதி அகற்றப்படாமையால் அப்பெறுமதியால் நிலையான சொத்துக்கள் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டில் உடைத்து அகற்றப்பட்டிருந்த ரூபா 73,710 பெறுமதியான முன்னரங்கு அலுவலகக் கட்டிடம், கட்டிடத்தின் பெறுமதியில் உள்ளடங்கியிருப்பதால் அப்பெறுமதியால் நிலையான சொத்துக்கள் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஈ) மீளாய்வாண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்த ரூபா 2,836,958 பெறுமதியான பரகும் வாரச்சந்தையின் கடைகளின் பெறுமதி ரூபா 2,053,658 ஆன கிரயமான ஹஸ்திகுச்சி வாகன நிறுத்துமிடத்தின் பெறுமதி கணக்கீடு செய்யப்படாமையால் அப்பெறுமதியால் நிலையான சொத்துக்கள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 18 காணிகள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படாத 46 காணித் துண்டுகள் என 64 காணிகளுக்குரிய பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின் நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் ரூபா 60,000 பெறுமதியான இஹல கிரிபாவ மற்றும் ரூபா 60,000 தம்புத்த மயானக் கட்டிடம் என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 02 கணக்கு விடயங்களில் மீதிகளுக்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் அவற்றிற்குரிய துணைப்பதிவேடுகளில் காணப்பட்ட மீதிகளிடையே ரூபா 185,427 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 36,504,990 ஆக இருந்ததுடன், பெற வேண்டிய கணக்கு மீதிகளில் ரூபா 290,366 தொகையான குத்தகை வாடகை மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாக காணப்பட்டமையால் அவற்றை அறவிடுவதற்கு மஹவ நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 29,497,477 ஆகும். அவற்றில் 01 ஆண்டிற்கு மேற்பட்ட 03 ஆண்டுகளுக்கு குறைந்த ரூபா 24,953,885 அல்லது 84 சதவீதம் காணப்பட்டது. மேலும் அத்தொகையில் 98.5 சதவீதம் முன்னைய ஆண்டுகளில் மேற்கொண்ட நிர்மாணங்களுக்காக நிதிஏற்பாடு கிடைக்காததன் பேரிலான கடன் மீதியாகும்.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 62,379 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,396,022 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 1,333,643 ஆன வீழ்ச்சியொன்று காணப்பட்டது. இந்த செயற்பாட்டு விளைவிற்கு ரூபா 12,603,237 ஆன மூலதன உதவி மற்றும் ரூபா 12,554,710 ஆன மூலதன செலவுகளை சீராக்கம் மேற்கொண்ட போது மீளாய்வாண்டு தொடர்பான நிதி விளைவுகள் ரூபா 110,906 ஆன மிகை ஒன்றாக மாறியுள்ளது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிச் செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் உரிய முரண்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமானம் | | | | செலவினம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | 2015 | 2014 | முரண் | செலவின விடயம் | 2015 | 2014 | முரண் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | உழைத்த வருமானம் | 3,828 | 2,736 | 1,092 | தனிப்பட்ட வேதனம் | 25,575 | 18,186 | 7,389 |
| (ii) | ஏனையவை | 28,655 | 23,650 | 5,005 | ஏனையவை | 6,845 | 6,804 | 41 |
| | உப மொத்தம் | 32,483 | 26,386 | 6,097 | உப மொத்தம் | 32,420 | 24,990 | 7,430 |
| (iii) | மூலதன வருமானம் | 12,603 | 25,527 | (12,924) | மூலதன செலவினம் | 12,555 | 22,604 | (10,049) |
| | மொத்தம் | 45,086 | 51,913 | (6,827) | மொத்தம் | 44,975 | 47,594 | 2,619 |
| | செயற்பாட்டு விளைவு | 62 | 1,396 | 1,334 | மிகை | 111 | 4,319 | 4,208 |

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானமாகிய ரூபா 32,482,701 தொகையில் மொத்தமாக நூற்றிற்கு 88 தொகை என ரூபா 28,655,119 தொகையும் சபையினால் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதிமன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் போன்ற பெறுவனவுகளினை அடக்கியுள்ளது.

(ஆ) மூலதன வருமானமாகிய ரூபா 12,603,237 இற்கான மொத்தத் தொகையும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி விடயங்களுக்கு கிடைக்கப்பெற்ற பணத்தினை அடக்கியுள்ளது.

(இ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவினமான ரூபா 32,420,321 தொகையில் 79 சதவீதமான ரூபா 25,575,173 தொகை தனிப்பட்ட சம்பளத்திற்காக செலவிடப்பட்டிருந்தததுடன் அவற்றில் 95 சதவீதமான ரூபா 24,367,082 ஆன சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்பட்டிருந்ததுடன், அப்பெறுமதி சம்பள மீளளிப்பின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மூலதனச் செலவினமான ரூபா 12,554,710 தொகையில் 10 சதவீதமாகிய ரூபா 1,267,945 தொகை மாத்திரம் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தததுடன் எஞ்சிய 90 சதவீதமான ரூபா 11,286,765 தொகை கமநெகும, மகநெகும, பிரதேச சபைகள் பலப்படுத்தலுக்காக மாகாண முதலீடு போன்ற மூலங்களின் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி விடயங்களை அடக்கியுள்ளது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

#### (அ) மதிப்பிடப்பட்ட வருமானமும் உள்ளபடியான வருமானமும்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம், செலவினம் மற்றும் நிலுவை வருமானம் என்பன கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015 மதிப்பிடப் பட்டது | 2015 உள்ளவாறான | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டிய பற்றாக்குறை | 2014 மதிப்பிடப் பட்டது | 2014 உள்ளவாறான | 2014 திசெம்பர் 31 இல் உள்ளாறு திரட்டிய பற்றாக்குறை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) வீதவரியும் வரியும் | 10 | 305 | 358 | 305 | 305 | 342* |
| (ii) குத்தகை வாடகை | 1,972 | 3,063 | - | 1,976 | 2,005 | - |
| (iii) அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 584 | 245 | 339 | 284 | 260 | - |
| (iv) ஏனைய வருமானம் | 64,327 | 28,869 | 3,818 | 6,560 | 6,860 | 2,727* |
| மொத்தம் | 66,893 | 32,482 | 4,515 | 9,125 | 9,430 | 3,069 |

### 2.3.2 பட்டியலிடப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2015/01/01 இல் நிலுவை | ஆண்டில் பட்டியலிட்டது | மொத்தம் | வருமான சேகரிப்பு: 2015/01/01 இல் நிலுவை | வருமான சேகரிப்பு: பட்டியலிடப்பட்ட வருமானத்தில் | வருமான சேகரிப்பு: மொத்தம் | நிலுவை மீதி: 2015/01/01 இல் நிலுவை | நிலுவை மீதி: பட்டியலிடப்பட்ட வருமானத்தில் | 2015/12/31 இல் நிலுவை கணிப்பீட்டின் பிரகாரம் | 2015/12/31 உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா.000 | ரூபா000 | ரூபா. 000 | ரூபா000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| வீதவரி மற்றும் வரி | - | 10 | 10 | - | 305 | 305 | - | - | (295) | - |
| வாடகை | 338 | 1,972 | 2,310 | 25 | 3,063 | 3,088 | 312 | 46 | (779) | 358 |
| அனுமதிப்பத்திர கட்டணங்கள் | - | 584 | 584 | - | 245 | 245 | - | 339 | 339 | 339 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| *ஏனைய வருமானம் | 4,606 | 64,327 | 68,933 | 4,225 | 28,869 | 33,094 | 479 | 3,339 | 35,937 | 3,818 |
| | ------- | ------- | ------ | ------- | ------- | ------ | ------- | ------- | ------- | ------- |
| மொத்தம் | 4,944 | 66,893 | 71,837 | 4,250 | 32,482 | 36,732 | 791 | 3,724 | 35,202 | 4,515 |
| | ==== | ==== | ==== | ==== | ==== | ==== | ==== | ==== | ==== | ==== |

* சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்ட 2015 சனவரி 31 இல் உள்ளவாறு நிலுவை மீதிகளில் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட இறுதி மீதிகளுடன் இணங்கவில்லை.

**2.3.3 வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் வருடாந்த கேள்வி அடிப்படையில் 09 சொத்துக்கள் ரூபா 1,744,547 இற்கு கேள்வித் தொகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் 65 சதவீதமான கேள்விப் பெறுமானத்தில் 03 வாரச்சந்தைகள் ரூபா 1,444,000 தொகைக்கு குத்தகையாளருக்கு வழங்கப்பட்டிருந்தன. குறித்த குத்தகையாளர் ஜனவரி முதல் ஏப்ரல் வரை குத்தகை பணத்தை செலுத்தாமை காரணமாக குத்தகை ஒப்பந்தம் செல்லுபடியற்றதாகியிருந்தது. குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் ரூபா 457,600 ஆன உடன்படிக்கை பிணைத் தொகை நிலுவை வாடகைக்காக ஈடுசெய்யப்பட்டிருந்ததுடன் மேலும் அவரிடமிருந்து ரூபா 45,760 ஆன தாமதக் கட்டணமொன்று சபைக்கு அறவிட வேண்டியிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் 08 குத்தகையாளர்களடமிருந்து 03 ஆண்டுகள் முதல் 25 ஆண்டுகள் வரை காலமாக இருந்து வரும் ரூபா 290,366 குத்தகை தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.3.4 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் 40 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக பல்வேறு மூலங்களிலிருந்து 2014 ஆம் ஆண்டில் கிடைத்த ரூபா 5,400,000 தொகையான நிதிஏற்பாடு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் மாகாண திட்டவட்ட மானியங்களின் கீழ் பஹல கிரிபாவ வைத்தியசாலையின் முன்னால் இருந்து கிராமத்திற்குச் செல்லும் வீதி முன்கலவை கொங்கிரீட் அச்சுக்கல் பதித்து மீளமைக்கும் நிர்மாணத்தின் 10 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ் 0.12 மீற்றர் உயரத்தில் ஆலோசணையின் பிரகாரம் II ஆம் தர பலகை பயன்படுத்தி வீதியின் இருபக்கத்திற்கும் கேர்ப் இற்கான வடிவத்தை எடுப்பதற்கு 2015 செப்தம்பர் 09 ஆந் திகதி ரூபா 100,237 செலுத்தப்பட்டிருந்த போதிலும், பல்வேறு இடங்கிளல் உயரம் 0.09 முதல் 0.0915 மீற்றர் வரையிலான விலகல் காணப்பட்டன. வடிவத்தை அமைப்பதற்கு மேற்பகுதி சீராக வரும் வகையில் மட்டப்படுத்தி உரிய உயரத்தில் வடிகாண் வெட்டி மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், 2016 மார்ச் 01 ஆந் திகதிய பௌதீக பரிசோதனையின் போது அவ்வாறு மேற்கொள்ளப்படாமை அவதானிக்கப்பட்டது. மேலும் உரிய அளவிற்கு வடிவு இடப்படாமையால் மற்றம் வடிகாண் வெட்டாமை என்பவற்றின் பேரில் கேர்ப் கொங்கிரீட் இடுவதற்காக செலுத்தப்பட்ட ரூபா 241,071 தொகை பௌதீக ரீதியாக அளவிடாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) பொதானே வெவ முன்பள்ளி கட்டிட நிர்மாணத்திற்காக 2014 ஆம் அண்டில் ஒரு கிராமத்திற்கு ஒரு வேலை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 600,000 மதிப்பீட்டு தொகையொன்று கிடைக்கப்பெற்றிருந்ததுடன் மீளாய்வாண்டு வரையில் 8 அடி 9 அங்குல 4 தூண்களும் 4 அத்திவார பீம்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு

நிர்மாணம் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் அதுவரை ரூபா 352,432 தொகை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2014 ஆம் ஆண்டில் குறைந்த வருமானம் பெறும் உள்ளராட்சி மன்றங்களை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 3,000,000 செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஹஸ்தி குச்சி வாகன நிறுத்துமிடத்தின் மலசலகூட முறைமையின் பெண்கள் மலசலகூடத்தின் முகம் கழுவதற்கான பேசன் பொருத்தப்பட்டிருந்த பகுதியின் நிலக்கல் பதித்தல் முறையாக மேற்கொள்ளப்படாத காரணத்தினால் நடுப்பகுதியில் நீர் நிறைந்து காணப்பட்டது. முன்பக்க கதவினை மூட முடியாத வகையில் கதவு நடுவில் வெடித்து வளைத்திருந்தது. இதன் காரணமாக பயன்படுத்தப்பட்டிருந்த பித்தளை சரனேரு மற்றும் யூனியன் வகை கதவு லொக்களும் சேதமடைந்து காணப்பட்டன. பெண்கள் மலசலகூடத்தின் ஒரு கூடத்தின் கதவு பொருத்தப்பட்ட நாள் மூடுவதற்கு முடியாதிருந்ததுடன் பீடே ஷவரும் சிஸ்டனும் பொருத்தப்பட்ட நாள் முதல் பயன்படுத்த முடியாமல் காணப்பட்டன. மேலும் மலசலகூடத்தின் முன்பக்க கூரைக்கு வடிம்பு அடிக்கும் போது வடிம்பு பலகைகளை அடிப்பதற்கு முன்னர் பராலைகள் நூல் இடப்பட்டு வெட்டி மட்டப்படுத்தப்படாமல் வடிம்பு பலகை பராலை அருகில் வெட்டி வெளியே தெரியும் வகையில் வடிம்பு அடிக்கப்பட்டிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரதேச சபையில் பதிவுசெய்யப்பட்டிருந்த 07 வழங்குனர்களிடமிருந்து விலை கோரப்படாமல் பதிவுசெய்யப்படாத வேறு நிறுவனங்களிடமிருந்து பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டில் 46 சந்தர்ப்பங்களில் பதிவுசெய்யப்படாத வழங்குனர்களிடமிருந்து நிர்மாணங்களுக்காக ரூபா 1,704,772 தொகையான கட்டிடப் பொருட்களும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 2013 மே 29 ஆந் திகதி நிதி மோசடியொன்று காரணமாக சேவையிலிருந்து நீக்கப்பட்ட வருமானக் காப்பளாரின் கடன் முற்பண மீதியான ரூபா 17,100 உம், நிக்கவரட்டிய பிரதேச சபையிலிருந்து இடமாற்றம் பெற்று வந்த 1993 ஆகஸ்ட் 01 ஆந் திகதி ஓய்வுபெற்ற உத்தியோகத்தரிடமிருந்து நிக்கவரட்டிய பிரதேச சபைக்கு அறவிடப்பட்டிருந்த ரூபா 14,100 ஆன கடன் மற்றும் முற்பணத் தொகையும் 1989 ஆம் ஆண்டிற்கு முன்னர் கல்நேவ பிரதேச சபைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற வருமானக் காப்பாளரின் இடர்கடன் மீதியான ரூபா 2,688 தொகையும் மீளாய்வாண்டின் இறுதி வரையில் சபைக்கு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

---

கிரிபாவ கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தை நிர்மாணிப்பதற்காக கையேற்கப்படாத அரச காணியொன்றில் 05 ஏக்கர் அளவிலான பிரதேசத்தில் 202.45 x 100 நீளமாகவும் அகலமாகவும் வேலியொன்றை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் பௌதீக பரிசோதனையின் போது 276 வேலிக்கம்பங்களில் 260 கம்பங்கள் கலன்று நிலத்தில் விழுந்திருந்ததுடன் கொங்கிரீட் இடும் போது பாதத்திற்கு கொங்கிரீட் இடப்பட்டிருக்கவில்லை. 05 சுற்று முற்கம்பி சுற்றி அடிக்கப்பட்டிருந்ததுடன் 200 அடி அளவிலான பிரதேசத்தின் முற்கம்பிகள் வெட்டி எடுத்துச் செல்லப்பட்டிருந்தன. 14 கம்பித்தூண்கள் உடைந்திருந்தன. இடம்பெற்ற நட்டத்தை கணித்து பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. 04 ஆம் இலக்க வேலை விடயத்தின் கீழ்

1:3:6 (40mm) கலவையில் கம்பித் தூண்களின் அடி கொங்கிரீட் இடாதிருக்கையில் பௌதீக செயன்முன்னேற்றம் நூறு சதவீதமாக குறிப்பிடப்பட்டு ரூபா 341,913 தொகை 2014 செப்தம்பர் 24 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 4.1.1 பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 2,175,445 தொகையான 03 சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் போது துலஅட்டேகனுவ பொது நூலகத்திற்கு நீர் வசதிகளை வழங்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 13,950 பெறுமதியான நீர்ப்பம்பியின் உத்தரவாதக் காலம் கடந்திருந்தும் விளைவற்றுக் காணப்பட்டது.

## 05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) ஒப்பந்த நிருவாகம்
(ஈ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்